# சங்க இலக்கியப் பாடல்களில் மகளிர் சமூகம் (பெண்ணியச் சிந்தனையை முன்வைத்து)

# Women’s Society in Sangam Literary Poem (Presenting Feminist thought)

***முனைவர் அ. இளையராஜா***
*கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை*
*மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.*
*அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி*
*காட்டுமன்னார்கோயில்*

**Dr. A. Ilaiyaraja**
*Guest Lecturer*
*Maanbumigu Dr. Puratchi Thalaivar M.G.R.*
*Govt. Arts & Science College*
*Kattumannarkovil*

## ஆய்வுச் சுருக்கம்

*பெண்கள்சமுதாயக்கட்டுப்பாடுகளாலும், அழகுணர்ச்சியினாலும் அடக்கி வைக்கப்பட்டுள்ளனர். பண்பாட்டு அடிப்படையிலான இந்த அடக்கு முறையில் இருந்து வெளிவருவதே பெண் விடுதலையாகும். இவ்விடுதலையை நோக்கிய செயல்பாடுகளே பெண்ணியம் என்ற கோட்பாட்டு தளத்திற்கு முன்னெடுத்துச் செல்கிறது. பெண்ணியம் என்பது பெண்ணுக்கு எதிராக எழும் எந்த ஆயுதத்தையும் முறியடித்து அவளுக்குத் தனித்துவம் உண்டு என்பதை உணரச்செய்வது எனும் நிலைகளங்களை ஆராயும் வண்ணமாக இவ்வாய்வுச் சுருக்கம் அமைகின்றது.*

***முக்கியச் சொற்கள்:*** *பண்பாடு, சங்க இலக்கியம், பெண்ணியச் சிந்தனை, மகளிர் சமூகம், பெண்ணியம்*

## Abstract

*Women are oppressed by social restrictions and aesthetics. Women’s emancipation is the emergence of this culturally based oppression. In this way, it is the activities towards liberation that advance to the theoretical platform of feminism. The summary of this study focuses on the stages where feminism is about overcoming any weapon that arises against a woman and realizing that she has uniqueness.*

***Keywords:*** *Emancipation, Feminism, Liberation, Uniqueness, Oppression*

## Citation

Ilayaraja, A. “Women’s Society in Sangam Literary Poem (Presenting Feminist thought).” *Journal of Tamil Culture and Literature*, vol. 2, no. 2, 2022, pp. 4–10.

CC BY SA

*https://doi.org/10.5281/zenodo.20136021*

**முன்னுரை**

*ஆண்-பெண் என்ற இரு பாலினத்தின் கூட்டமைப்பே குடும்பம் மற்றும் சமூகமாகும். சமூகத்தின் சரி பாதியாக விளங்கும் பெண்கள் காலங்காலமாகச் சமூகத்தின் தாக்குதலுக்கு ஆட்பட்டு தனது சம உரிமையை இழந்து காணப்படுகின்றனர். இத்தாக்குதலிலிருந்து மீண்டுவர எண்ணிய பெண்கள் ஏற்படுத்திய கருத்தாக்கமே பெண்ணியம் என்பதாகும். பெண்களின் எல்லாச் சிக்கல்களையும் புரிந்துகொண்டு அவற்றை நீக்க முயல்வதாகும். அதன் மூலம் உலக அரசியலிலும் பண்பாட்டிலும், பொருளாதாரத்திலும், ஆன்மீகத்திலும் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும் (சால்ட்பன்சட், பெண்ணியம் அணுகுமுறைகள், பக். 17-18). ஆண்களால் உருவாக்கப்பட்ட இச்சமூகத்தில் பெண் தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்வதற்காகப் பல்வேறு நிலையிலும் போராட வேண்டியுள்ளது என்பதை முன்வைத்து சங்க இலக்கியப் பாடல்களில் மகளிர் தம் வாழ்வியலை எவ்வாறு சிறப்பு நிலையாக வாழ்ந்தார்கள் என்பவற்றை நுணுகி ஆராய்ந்துள்ளது இவ் ஆய்வுக்கட்டுரை.*

**பெண் நிலை**

*பெண் என்னும் சொல் பெண்களுக்குரிய இயல்புகளை உடையவள் என்று பொருள்படும். தமிழில் பெண்ணியம், பெண்நிலைவாதம், பெண்ணரிமை, எனும் பெயர்களில் வழக்கிலுள்ளன.*

*பெண் என்னும் சொல், பெண்களுக்குரிய இயல்புகளை உடையவள் என்று பொருள்படும் (ச. முத்துச்சிதம்பரம், பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும், ப. 9) என்கிறார் முத்துச்சிதம்பரம்.*

*பெண்ணலம் என்பது பெண்மைக் குணம், பெண் இனம் (தமிழ்வாணன், மணிமேகலைத் தமிழ் அகராதி, ப. 49811) என்கிறது கழகத் தமிழ் அகராதி.*

**பெண்மொழி**

*ஆண், பெண் வாழ்கதை அமைப்பினைக் கொண்டு எழுந்த முதல் இலக்கண நூலாக திகழக்கூடிய தொல்காப்பியத்தில் ஆண் போருக்குச் சென்றதால் போருக்குண்டான வலிமையும், அப்போரின் வெற்றியால் உண்டாகும் பெருமையையும் கருதி பெருமையும் உரனும் ஆடூஉமேன (இளம்.உரை.தொல்.களவு. நூ. 8), தொல்காப்பியர் எடுத்துரைக்கிறார். பெண்கள் போர்க்களம் சென்று போரிடவில்லை, ஆயினும் உடலால் வீருமில்லை எனினும் உள்ளத்தால் வீரப்பண்பைக் கொண்டவர் ஆதலால் ''மூதின் முல்லை'' என்ற துறையை பெண்மைக்குத் துறைவகுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.*

***''தலைவியின் நெறிமுறைகள்***
***தொல்காப்பியர் பெண்ணின் நெறியினை,***
***அச்சமும் நாணும் மடனும் முந்துறத்த***
***நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப''*** ***(இளம்.உரை.தொல்.கள. நூ. 8)***

*எனும் நூற்பாவின் வாயிலாக எடுத்துரைக்கிறார்.*

*மேலும்,*

> ‘‘***வேட்கையுற்றுழியும் அச்சத்தானாதல்***
> ***நாணா னாதல் மடத்தானாதல் புணர்ச்சிக்கு***
> ***இசையாது நின்று வரைந்நெய்தல்***
> ***வேண்டுமென்பது போந்தது***
> ***இவ்வாறு இருவரும் உள்ளப்புணர்ச்சியால்***
> ***நின்று வரைந்தெய்தி மெய்யுறும்*** ’’ ***(இளம்.உரை.தொல்.கள. நூ. 7)***

*என்று குறிப்பிடுவார். இதனால் சமுதாயத்தில் பெண்களுக்கு பாதுகாப்புக் கருதி இப்பண்புகள் பெண்ணிற்குரியதாகின்றன.*

*பெண் அச்சப்படும் சூழல் சங்ககாலத்தில் களவு வாழ்க்கையில் நிகழ்ந்துள்ளது. களவில் ஈடுபட்ட தலைவி இல்லில் இச்செறிக்கப்பட்ட போதும், தலைவியின் களவு நிகழ்ச்சி கண்காணிக்கப்பட்ட போதும் தலைவி, தோழி இருவரும் அச்சப்படுகின்றனர். காரணம் காதல் கொண்ட தலைவனுடன் திருமணம் நடக்க இடையூறு ஏற்படுமோ? என்ற நிலையில் அச்சம் ஏற்படுகிறது. இதனை தொல்காப்பியர்,*

> ‘‘***உயிரினும் சிறந்தன்று நாணே, நாணினும்***
> ***செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று***’’ ***(இளம்.உரை.தொல்.களவு. நூ. 22)***

*என்று எடுத்துரைக்கிறார்.*

*அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு இந்நான்கில் பெண்ணாகக் காட்டுவது நாணம். நாணமின்றேல் பெண்ணில்லை. அந்நாணத்தைவிடக்கற்புச் சிறந்தென்றுங் கூறுவர். இந்நாணம் களவில் விலகியும், கற்பில் நாணம் இணைந்தும் சங்கப் பாடல்களில் பல இடங்களில் பாடப்பட்டுள்ளது. இதனை,*

> ‘‘***அளிதோ தானே நானே நம்மொடு***
> ***நனிநீடு உழந்தன்று மன்னே இனியே***’’ ***(வி. நாகராஜன் (உ.ஆ.), குறுந். பா. 141:1-2)***

*எனும் பாடலடிகளில் உடன் போக்குணர்த்திய தோழிக்குத், தலைமகன் தலைவன் மீது கொண்ட காதலால் நாணம் அழிந்து படுமோ என்று கூறுவதாக அமைந்துள்ளது என்பதை (வி. நாகராஜன் (உ.ஆ.), குறுந். பா. 231:4, கு.வெ.பாலசுப்பிரமணியன், (உ.ஆ.) நற். பா. 15:10, 93:9) ஆகிய பாடல்கள் எடுத்துரைக்கின்றன.*

*நாணம் கற்பு வாழ்க்கையில் பெண்மைக்கு சிறப்புச் சேர்ப்பதாய் அமைகின்றது என்பதை,*

> ‘‘***நாணொடு மிடைந்த கற்பு***’’ ***(செயபால், (உ.ஆ.) அகம், பா. 9:24)***

*என்ற அடிகள் உணர்த்துகின்றது.*

**பெண் கல்வி**

*சங்க காலத்தில் கல்வி அனைவருக்கும் பயிலும்படி அமைந்தது. இக்கல்வி எவ்வாறு போதிக்கப்பட்டது என்ற சான்றில் ‘‘ஆயினும் மன்றத்து’’ என்ற சொல் காணப்படுகிறது. ‘மன்றத்து ’ என்றச் சொல்லைக் கொண்டு கல்விபயில்வதற்கு என ஒரு இடம் இருந்தது என்று கே.கே. பிள்ளை கருதுகிறார் (கே.கே. பிள்ளை, தமிழக வரலாறும், பண்பாடும், ப. 397).*

*சங்க காலத்தில் கல்வி என்ற சொல் பல இடங்களில் இடம்பெற்றுள்ளன. கல்வி*

*உயர்ந்தோரும், பொருளாதார நிலையில் தாழ்ந்தவர்களும் கற்கும்படி இருந்தது என்பதை,*

***"உற்றுழி யுதவியும் உறுபொருள் கொடுத்தும்***
***பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே"***

***(கு.பெ. பாலசுப்பிரமணியன், (உ.ஆ) புறம். பா. 183)***

*என்று கல்வியைக் கற்றுக் கொடுப்பவனுக்குப் பொருள் கொடுத்தோ, ஊழியம் செய்தேனும் கற்றுக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிடுகிறார்.*

***"கீழ்ப்பா லொருவன் கற்பின்***
***மேற்பா லொருவனு மவன் கட்படுமே"***

***(கு.வெ. பாலசுப்பிரமணியன், (உ.ஆ.) புறம். பா. 183:9-10)***

*எனும் வரிகளில் கற்றவனுக்குரிய சிறப்பைக் கூறுகின்றார்.*

*இக்கல்வியைக் கற்றவன் சமுதாயத்தில் பெருமிதத்துடன் வாழ இயலும் என்பார். தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில் பெருமித உணர்ச்சியில் 'கல்வி தறுகண்.....' என்று கல்வியைக் கூறுவார்.*

*பெண் புலவர்களில் மலை நாட்டுப் பெண்களில் கல்வி கற்றறிந்ததற்குக் குறமகள் இளவெயினி, குறமகள் குறியெயினி போன்ற பெயர்கள் சான்றாகும். ஏறைக்கோள் என்ற மலைநாட்டுத் தலைவனை மலைவாழ் மங்கையொருத்தி பாடுகிறாள்.*

***"தமர் தந்தப்பின் அது நோன்றல்லும்***
***பிறர்கை யறவு தான் நாணுதலும்***
***படைப்பழி தாரா மைந்தினன் ஆகலும்***
***வேந்துடை அவையத்து ஓங்குபு நடத்தலும்***
***நம்மோர்க்குத் தகுவன அல்ல எம்மோன்***
***பெருங்கல் நாடான் எம் ஏறைக்குத்தகுமே"***

***(கு.வெ. பாலசுப்பரமணியன், (உ.ஆ.) புறம். பா. 157)***

*எனும் பாடலடிகள் மூலம் ஏறைக்கோளின் மறப்பண்பையும் அவன் நற்குணத்தையும் பாடுமளவிற்கு மலைவாழ் பெண்கள் கல்வியறிவு பெற்றிருப்பதற்கு சிறந்த சான்றாகும். மேலும் அடிப்படைக் கல்வியைப் பெண்டிர் பெற்றிருந்தனர் (கு.வெ. பாலசுப்பிரமணியன் (உ.ஆ), நற். பா.159:3-4, புறம். பா. 117, கு.வெ. பாலசுப்பிரமணியன் (உ.ஆ), நற். பா. 372:10-13) எனும் நிலைகளில் சூழலுக்கு ஏற்ப கல்வியை கற்றிருந்தனர் என்பதை அறியமுடிகிறது.*

**மகளிர் வீரம்**

*சங்க காலத்தில் பெண்கள் போர்க்களம் செல்லவில்லை. வீரப்பண்புடன் விளங்கினர் என்பதை, தொல்காப்பியர் 'காஞ்சித்திணையில்' பெண்களைச் சுட்டுகிறார். மேலும், போரின் முடிவில் இறந்த வீரர்களைப் பெண்டிர் சென்று கண்டு அழுதனர் என்பதையும் போரின் போது பெண்களுக்கு விலக்களிக்கப்பட்டதை புறப்பாடல் எடுத்துரைக்கிறது. இதனை,*

***"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்***
***பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்"***

***(கு.பெ. பாலசுப்பிரமணியன், புறம். பா. 9:1-2)***

*என்றும்,*

*மகளிர் போர்க்களம் சென்று போரிடவில்லையாயினும் மறப் பண்புடன் வாழ்ந்தனர். இதற்கு ''முதின் முல்லைத் துறை'' சான்றாகும் என்பதை,*

''***புலி சேர்ந்து போகிய கல்லனை போல***
***ஈன்ற வயிறோ இதுவோ***
***தோன்றுவன் மாதோ போர்க்களத்தானே***''

***(கு.வெ. பாலசுப்பிரமணியன் (உ.ஆ), புறம். பா. 86:4-6)***

*எனும் பாடலடிகளில் தாயின் வயிற்றில் வீரமகனைச் சுமந்து பெற்றான் என்பதையும், புலி தங்கியிருந்த குகை என்பதையும் பறை சாற்றுகிறாள்.*

*ஒரு ஆண் வீரமிக்கவனாக உருவாவது கருவிலிருந்து வரவேண்டும் என்பதை அவ் மறப்பெண் சுட்டிக்காட்டுகிறாள்.*

*ஒரு தாய் போர்க்களம் சென்று பலரும் போர் முடிந்து இல்லம் திரும்ப தன் மகன் வராததால் வருபவர்களிடம் மகனைப் பற்றி வினவுகிறாள். அதற்கு உன் மகன் போர்க்களத்தில் புற முதுகில் புண்பட்டு மாண்டான் என்று கூறக் கேட்டதும் அவ்வாறு அவன் இறந்திருந்தால் அவனுக்குப் பாலூட்டிய முலையை அறுத்திடுவேன் என்று களம் புகுந்து தன் மகன் மார்பிலே விழுப்புண்பட்டு இறந்ததைக் கண்டு பெற்ற பொழுதைவிட மகிழ்கிறாள் என்பதை,*

''***மண்டமர்க் குடைந்தனனாயி னுண்டவென்***
***முலையறுத் திடுவென் யானெனச் சினைஇக்***
***கொண்ட வானொடு.............***''

***(கு.வெ. பாலசுப்பிரமணியன் (உ.ஆ), புறம். பா. 278)***

*எனும் பாடலடிகள் உணர்த்துகினற்ன.*

*மற்றொரு மங்கை போர்க்களம் சென்று தந்தை, கணவன் இருவரையம் இழந்துவிட்ட நிலையில் போர்ப்பறை ஒலிக்கக் கேட்டு ஒரு மகனையும் போர்க்களத்திற்கு அனுப்பினாள். இதனை,*

''***பாறுமயிர்க் குடுமியெண்ணெய் நீவி***
***ஒருமக னல்ல தில்லோன்***
***செருக நோக்கிச் செல்கென விடுமே***''

***(கு.வெ. பாலசுப்பிரமணியன் (உ.ஆ), புறம். பா. 279)***

*எனும் பாடலடிகளில் மறக்குடி மங்கையின் மறப்பண்பை அறியமுடிகிறது.*

**மகளிர் பொறுப்புகள்**

*சமுக அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சூழலிலும் சில பொறுப்புகள் உள்ளன. எச்சூழலிலும் அவற்றை அவர் நிறைவேற்றுவது அவரது கடமையாகிறது. இவ்வகையில் ஒவ்வொரு பெண்ணும் தனது பருவம் மற்றும் தகுதிக்கு ஏற்ப இல்லப் பொறுப்புகளை மேற்கொண்டுள்ளாள் (ச. சிவகாமி, சங்கச் சமுகத்தில் பெண்டிர் நிலை, ப. 79) என்பார்.*

''***பெண்டிர் இல்லப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டதை,***
***பாசவல் இடித்த கருங்காழ் உலக்கை***
***ஆய்கதிர் நெல்லின் வரம்பு அணைத்துயிற்றி***
***ஒண்டொடி மகளிர் வண்டல் அயரும்*** ''

***(வி. நாகராஜன், (உ.ஆ), குறுந். பா. 238:1-3)***

*என்பதால் பெறலாம். இல்லத்திற்கத் தேவையான நீர் கொணர்தல் (வி. நாகராஜன், (உ.ஆ), குறுந். பா. 361), உணவுப் பொருள் தொகுத்தல் (கு.வெ. பாலசுப்பிரமணியன் (உ.ஆ), புறம். பா. 176), திணைப்புனக் காவலும் (கு.வெ. பாலசுப்பிரமணியன் (உ.ஆ), நற். பா. 134:3-6), இல்லத்தில் உள்ள கறவைகளிடம் தீம்பால் கறந்து கன்றுகளை அவற்றிற்குரிய தாம்புகளில் பிணித்து அவற்றை ஓம்பும் பணி (அ. விசுவநாதன் (உ.ஆ), கலி. பா. 111:1-3, முல். பா. 12-16) போன்ற பாடல்களில் ஆயர்குல மகளிரின் வாழ்வியல் அறியமுடிகிறது.*

*வயல்களில் களையெடுத்து (கு.வெ. பாலசுப்பிரமணியன் (உ.ஆ), புறம். பா. 61:1-3) அறுபடைக்கு முன் விளைந்த கதிர்களைப் பறவைகள் பற்றாது ஓம்பிப் பின் அவற்றை அறுத்து இடித்து அரிசியாக்கும் பொறுப்பை (இரா. செயபால், அகம். பா. 145:16-19) வரிகள் எடுத்துரைக்கின்றன.*

*தயிர் கடைந்து அதனை மோராக்கி விற்று, அதனின்றும் கிடைத்த வருவாயில் சுற்றத்துடன் பகிர்ந்துண்டும், நெய்யினால் வரும் வருவாயில் நல்ல கறவைகளைப் பெற்றுத் தன் இல்லத்தினை மேலும் வளம் பெறச் செய்யும் ஆய மகளிரை,*

"***ஆம்பி வான்முறை அன்ன கூம்பு முகிழ்***
***உறையமை தீந்தயிர் கலக்கி நுரைதெரிந்து***
***புகர்வாய்க் குழிசி பூஞ்சுமட்டு..........***"
***(அ. தட்சிணாமூர்த்தி (உ.ஆ.), பெரும். பா. 157)***

*திருமணப் பணிகளை நிறைவேற்றும் பொறுப்பும் பெண்டிரின் பாற்பட்டதை,*

"***கானக நாடன் வரையின்***
***மன்றலும் உடையான்***
***கொல் தோழி யாயே***" ***(ஐங். பா. 253)***

*எனும் பாடலடிகள் அறிவிக்கிறது.*

**முடிவுரை**

*பெண்ணியம் பெண்மைப்பற்றியது. பெண்ணியம் குறித்த பல அறிஞர்களின் கருத்தும் பெண் ஆணுக்கு நிகரானவள் என்பதாகும். மேலும், பெண்களுக்கு அச்சம், நாணம், மடன், பயிர்ப்பு போன்ற பண்புகள் வழங்கப்பட்டன. இப்பண்புகளால் பெண்ணுரிமை பாதிக்கப்படவில்லை. இப்பண்புகளைப் பெண் விரும்பி ஏற்றுக் கொண்டுள்ளாள். கல்வி இருபாலருக்கும் பொதுவாக இருந்தது. பெண்கள் பலர் கல்வி கற்றுத் தேர்ந்ததற்குப் பெண்புலவர்களின் எண்ணிக்கைச் சான்றாகின்றது. கல்வி பெறுவது மனித உரிமை. இவ்வுரிமை பெண்ணிற்குச் சமுதாயம் வழங்கியது. பெண்ணுரிமை நிலைநாட்டப்பட்டதற்கு சான்றாக அமைந்துள்ளது.*

**துணைநின்ற நூல்கள்**

1. *இளம்பூரணர் (உ.ஆ.), தொல்காப்பியமும் மூலமும் உரையும், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 2004.*
2. *வி. நாகராஜன், (உ.ஆ), குறுந்தொகை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவஸ், சென்னை, 2004.*

3. கு.பெ. பாலசுப்பிரமணியன் (உ.ஆ), நற்றிணை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவஸ், சென்னை, 2004.
4. கு.பெ. பாலசுப்பிரமணியன் (உ.ஆ), புறுநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவஸ், சென்னை, 2004.
5. செயபால் (உ.ஆ), அகநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவஸ், சென்னை, 2004.
6. கே.கே. பிள்ளை, தமிழக வரலாறும் பண்பாடும், சென்னை, 2002.
7. நச்சினார்க்கினியர் உரை, கலித்தொகை கழக வெளியீடு, சென்னை, 1999.


**References**


1. Ilampooranar, Tholkappiyam Moolamum Uriyum, Manivasagar Pathipagam, Chithambaram, 2004.
2. Nagarajan, V., Kurunthogai Moolamum Uriyum, New Century Book House, Chennai, 2004.
3. Balasubramanian, K.P., Natrinai Moolamum Uriyum, New Century Book House, Chennai, 2004.
4. Balasubramanian, K.P., Purananooru Moolamum Uriyum, New Century Book House, Chennai, 2004.
5. Jayabal, Agananooru Moolamum Uriyum, New Century Book House, Chennai, 2004.
6. Pillai, K.K., Thamilaga Varalarum Panpadum, Chennai, 2002.
7. Natchinikiniyar Urai, Kalithogai, Kazhaga Veliyeedu, Chennai, 1999.